

# வித்தகர்

'சிட்டி'






# 'சிட்டி அன்பர்' வீரராகவன்

தன் எண்பத்து மூன்று வயதில், ஒரு இளைஞரைப் போன்ற உற்சாகத்துடன் அமரர் சிட்டியின் நினைவைப் போற்றுவதிலும், அவருடைய புகழைப் பரப்புவதிலும் ஈடுபட்டிருப்பவர் வீரராகவன். இலக்கிய ஜாம்பவானும் மணிக்கொடி எழுத்தாளருமான சிட்டி, தன் துவக்க காலத்தில் திரு. வீரராகவன் திருச்சியில் நடத்தி வந்த கையெழுத்துப் பத்திரிகையான 'விநாயகா'வில் எழுதினார். சிட்டி நூற்றாண்டு விழாவின் துவக்கக் கூட்டத்தில் (18/4/2009), நூற்றாண்டு நிறைவு பெறும் ஏப்ரல் 20ல்

சிட்டி பற்றிய தம் கருத்துக்களை சில சிட்டி அன்பர்களிடமிருந்தும், எழுத்தாளர்களிடமும், வாங்கி சேகரித்து தன் அழகிய கையெழுத்தில் வீரராகவன் பிரதி எடுத்திருக்கிறார். தேவராஜன் என்ற ஓவியரின் கலை நுணுக்க வேலைப்பாடுகளுடன் இந்தச் 'சிட்டி நினைவு மலரை' 18/7/2010 அன்று சிட்டிகுடும்பத்தினரிடம் ஒப்படைத்தார். இதில் எழுதியவருக்கும் சில அறிஞர்களையும் சிட்டி குடும்பத்தினரையும் தம் வீட்டிற்கு அழைத்து, விருந்து வைத்து இதை ஒரு விழாவாகவே நடத்தினார், வீரராகவன்.

கையெழுத்துப் பத்திரிகையில் தம் எழுத்துப் பணியைத் துவக்கிய சிட்டி பற்றிய நினைவு மலர் கையெழுத்து ரூபத்திலேயே தயாரிக்கப்பட்டிருப்பது ஒரு அரிய முயற்சி.



# வித்தகர்

ஏ.எஸ்.ராகவன்

ஸ்ரீமான் சிட்டியைப் பற்றி ஒருபதினைந்து வரிகள் எழுதித் தாருங்கள். அவருடைய நூறாவது பிறந்த நாளை ஒட்டி ஒரு மலர் வெளியிடுகிறேன் என்று அருமை நண்பர் வீரராகவன் என் வீடு தேடி வந்து, படை, படைக்கிற வெய்யிலில் கேட்டது மல்லாமல், இதுவரை மலருக்கு யார் யார் விஷய தானம் செய்திருக்கிறார்கள் என்ற லிஸ்ட்டையும் காண்பித்தார். அந்த வரிசை (galaxy) யைப் பார்த்ததும் நானும் அதில் சேராமல் போனால் நஷ்டம் எனக்குத்தான் என்று புரிந்து போயிற்று. 'கட்டாயம் எழுதி அனுப்புகிறேன்' என்று வாக்கு கொடுத்து விட்டேன்.

அறுபத்தைந்து வருடங்கள் பின்நோக்கி, அதாவது 1945-வது வருடத்து நினைவுகளோடு சல்லாபித்து, திருச்சி மாநகரின் கோர்ட்டு வளாகத்துக்கு எதிரே சஞ்சாரம் செய்ய புறப்படுகிறேன். கிருஷ்ணஐயர் ஹோட்டல் அப்பகுதியில் அப்போதெல்லாம் பிரசித்தம். ஹோட்டலை ஒட்டினாற்போல், காம்பவுண்டுக்குள் இருந்த ஐந்து அறைகளில் ஒன்றில், நானும் நண்பர் நாராயணசாமியும் தங்கியிருந்தோம். பெரிய எழுத்தாளனாகி விடவேண்டும் என்ற கனவு எனக்கு! பெரிய ஒவியனாகி விட

வேண்டும் என்பது நாணுவின் கனவு! இதை எப்படியோ கண்டு கொண்ட நண்பர் சுப்பிரமணியம் (ஆம். இந்த நூற்றாண்டு மலரை தயாரித்து வெளியிடும் ஆசிரியர் கே. விஜயராகவனின் மூத்த சகோதரர் என்பது குறிப்பிடத் தக்கது!) எங்கள் இருவரையும் இணைத்து "ஸ்ரீ. விநாயகா" என்னும் கையெழுத்துப் பத்திரிகையை வெளிக் கொணரத் திட்டமிட்டார். அதற்கு ஆதார சுருதியாக "ஸ்ரீவிநாயகா கலைக்கழகம்" அமைந்தது!

அந்த பத்திரிகைக்கு நல்ல வரவேற்பும், பாராட்டும் கிடைத்தன! சிறுகதைப் போட்டி பரிசுகள் கூட வழங்கினோம்! பிறகு திருஷ்டி பட்டாற் போல் நான் ஆசிரியர் பதவியிலிருந்து விலகிக் கொள்ளும்படி நேர்ந்தது! ஆம், நான் கிருஷ்ண ஐயர் ஹோட்டல் அறையை விடுத்து மேலவாசல் வெங்கடா லாட்ஜ் அறைக்கு இடம் பெயர்ந்தேன்.

அப்போதெல்லாம் தினசரி ஆபீஸுக்கு நடைதான். கோர்ட்டு வளாகத்திலிருந்து கிளம்பி கண்டோன்மெண்ட் போலீஸ் ஸ்டேஷனின் பின்புற ரோடு வழியாக சேஷசாயி பங்களா வரை நேர் கோடு

பிறகு வலது புறம் திரும்புதல், சற்றைக்கெல்லாம் இடது புறம் திரும்பி நேர்க்கோடு போட்டால் ஜங்ஷன் வரும். இடையே ஆல் இண்டியா ரேடியோ அலுவலகம். பல சமயங்களில் ஸ்ரீமான் சிட்டி அவர்கள் கண்ணில் படுவார். நல்ல உயரம். மெலிந்த உடல். கருப்பு நிறம். கூர்மையான விழிகள், அதைவிடக் கூர்மையான மூக்கு!

அவரிடம் பேச ஆசைதான். ஆனால் உள்ளூர பயம். எவ்வளவு பெரியவர் அவர்! என்ன பேசுவது அவரிடம்? சொல்லிக் கொள்கிறப்போல் என் சாதனைகள் தாம் என்ன? அவர் வானொலி இதழின் ஆசிரியர். நான் 'ஸ்ரீ விநாயகா' எனும் கையெழுத்துப் பிரதியின் ஆசிரியர். இந்த ஒற்றுமை மட்டுமே எனக்கு வேண்டுமானால் பெருமையாக இருக்கலாம். ஆனால் அவருக்கு?

பின்னர் கவிஞர் திருலோக சீதாராம் அவர்களோடு எனக்கு அறிமுகமாகி நானும் எழுத்துலகில் எனக்கென்று ஒரு ஸ்தானத்தை ஏற்படுத்திக்கொண்ட கால கட்டத்தில் சிட்டி திருச்சியை விட்டு சென்னைக்குச் சென்றுவிட்டார். அவரைப்பற்றி கிச்சாண்ஞ்ச, தி. ஜானகிராமன், சிவபாதசுந்தரம் ஆகியோர்

மிக உயர்வாக என்னிடம் நிறையச் சொல்லியிருக்கிறார்கள்.

இரண்டொரு முறை மேடைகளில் அவரைச் சந்தித்திருக்கிறேன். இலக்கியச் சிந்தனை ஆண்டு விழா நிகழ்ச்சி ஒன்றில் எனது தலைமையில் கரிச்சான் குஞ்சுவோடு (கு.ப.ரா பற்றிய நூல் வெளியீட்டை ஒட்டி) சிட்டியும் மேடையில் கலந்து கொண்டார். சகவாசம் கிடைத்த பெருமையில் மனமெல்லாம் பூரித்துப் போயிற்று. அவருடைய நட்பைப் பெறக்கிடைத்த அரியவாய்ப்பன்றோ அது!

திருச்சியில் அப்போது எழுத்துலக ஆரம்பவாதிகள் பலர் இருந்தனர். அந்தப் பட்டியலில் இருந்த தமிழ் ஆசிரியர் விந்தாகவன் தமது கட்டுரையில் விவரித்திருப்பதை அதை வரித்து திருலோகசீதாராம், அ.வெ.ரா கிருஷ்ணசாமி ரெட்டியார், கலாமோகினி வி.ரா.ராஜகோபால், வி.என்.கமலபதி, சிட்டி என்று கலா வித்தகர்கள் தெலுங்கை தாய்மொழியாகக் கொண்டாலும், தமிழைப் போற்றிப் பேணி வளர்த்ததை நன்றியோடு நினைக்கத் தோன்றுகிறது....

# ஒளி விளக்கு

செல்வி ஏ. வெங்கடலெட்சுமி (பேபி)

மேகத்திலிருந்து ஒரு நீர்த்துளி பூமியை நோக்கி வருகின்றது. கலவரத்துடனும், குழப்பத்துடனும் எங்கு விழுவது என்று தெரியாமல் வந்து கொண்டிருக்கிறது. மண்ணில் விழுந்தால் மண்ணோடு மண்ணாகி விடுவோமே, நெருப்பில் விழுந்தால் எரிந்து போய் விடுவோமே, நீரில் விழுந்தால் நீரோடு கலந்து என்று கலக்கத்தோடு வரும்பொழுது ஓர் அழகிய சிப்பி அந்த நீர்த்துளியை வாய் திறந்து ஏற்றுக் கொண்டு அதை முத்தாக மாற்றுகிறது. அந்த சிப்பிதான் சிட்டி ஜானகி தம்பதியர். அந்த நீர்த்துளிதான் நான்.

நான் இந்த அளவு வாழ்க்கையில் உயர, முன்னேற காரணமாக இருந்தவர்கள். என்னை நன்கு படிக்க வைத்து ஆளாக்கினவர்கள். கல்வியோடு நற்பண்புகளை, ஒழுக்கத்தை, பண்பாட்டை கற்றுத் தந்து என்னை சமூகத்தில் இந்த உயர்ந்த நிலைக்கு கொண்டு வந்தவர்கள் என் தாய்மாமா திரு. சிட்டி அவர்களும் ஜானகி அத்தையும்தான். விபரம் தெரிந்த நாளிலிருந்து மாமா, மாமியின் அன்பில், பாசத்தில் ஆதரவில் வளர்ந்தேன். என் தாயார் மிகக் கண்டிப்பானவர். அதே போலத்தான் சிட்டி மாமாவும் கண்டிப்பாக இருந்தாலும் அவருடைய பாசத்தையும் அன்பையும் வெளியே காட்டிக் கொள்வது கிடையாது. என் தாயாருடைய குணங்களும்

# சிட்டி மாமாவின் குணங்களும் ஏரோமந்திரி!

சிட்டி மாமாவின் எளிமை, நேர்த்த பொறுமை, ஒழுங்கு, நேர்மை, இவற்றையெல்லாம் பார்த்து வியந்து போவோம். தான் செய்தசாதனைகளை வெளியே காட்டிக் கொள்ளாமல் அடக்கமாக அவர் ஆற்றும் அவருடைய செயல்கள் எங்களை வியப்பில் ஆழ்த்தும்! நாங்களும் அவைகளை பின்பற்றத் தொடங்கினோம். அதைத்தான் Non Verbal action என்கிறோம்.

அப்படிச் செய், இப்படிச் செய் என்று அறிவுரைகள் வழங்காமல் தன் செயல்களின் மூலம் எங்களுக்கு நற்பழக்கங்கள் உண்டாக்கியவர். நான் 1959ம் ஆண்டு ஆசிரியையாக பணி தொடங்கிய பொழுது சிட்டி மாமா எனக்கு எழுதிய கடிதம் இன்றும் பொக்கிஷமாக திகழ்ந்து அதனை நான் பாதுகாத்து வருகிறேன். அதில் ஆசிரியப்பணியின் சிறப்புகள், நல்லாசிரியருடைய குணங்கள், கடமை உணர்வு எல்லாம் மிகத் தெளிவாக எழுதியிருந்தார். அவருடைய அறிவுரைகளை ஏற்று நான் 36 வருடங்கள் அதே St. Joseph Convent-ல் பணிமுடித்து ஓய்வு பெற்றேன். ஓய்வு பெறும் பொழுதும் அவர் எழுதிய கடிதம் ஒளிப்படத் தக்கதாகி வழங்கியது! அவரை குருவாக ஏற்றுக் கொள்கிறேன். குரு என்பவர் எதையும் போதிப்பதில்லை.

அவரே ஒரு போதனை. வழிகாட்டுபவர். எல்லோருமே குருவாக முடியாது. வாழ்ந்து காட்டுபவர்தான் குருவாக முடியும். சட்டி மாமா அவர்களைப் பற்றி சொல்லும் பொழுது மகான் ரமணமகரிஷிகளின் பொன்முத்து மொழிகள் நினைவிற்கு வருகின்றது.

"To see is to know, To know is to become
To become is to be"

அதனைப் பார்த்தல் என்பது அறிதல். அறிதல் என்பது அதுவாதல், அதுவாதல் என்பது அதுவாகி நிற்றல். மாமாவிடமிருந்து நற்பண்புகளை பார்க்கிறோம். அதிலிருந்து அறிகிறோம். அறிந்து கொள்வதிலிருந்து அதுவாகவே மாறுகிறோம்.

ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஓர் பெண்மணி இருப்பார் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. மாமாவின் சாதனைகளுக்குப் பின்னால், வெற்றிக்குப் பின்னால் அடக்கமான, அன்பான, இன்முகம் கொண்ட ஜானகி மாமி இருந்திருக்கிறார் என்று பெருமையோடு கூறிக்கொள்கிறேன். ஜானகி மாமி என்னுடைய அத்தை என்ற உறவுமுறையே வேறு! தாயைப் போல என்னைப் பரிவோடு, பாசத்தோடு வளர்த்த நாட்கள் நெஞ்சை விட்டு அகலாது. குடத்தில் இட்ட விளக்காக இருந்தவர். கூட்டுக் குடும்பத்தின் பெருமையை இவரிடம் தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு பெண் கல்வி கற்றால் ஆயிரம் சிறைச்சாலைகள் மூடப்படும் என்று ஒரு அறிஞர் கூறியுள்ளார்.

எங்கள் அத்தையோ கல்வி கற்காமலேயே ஆயிரம் குடும்பங்களை வாழவைத்த தெய்வம்! வேதத்தில் "ஹோமா" என்ற பறவை பற்றி கூறப்படுகிறது! இதை பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் ஒருமுறை குறிப்பிட்டுள்ளார்.

அப்பறவை பூமிக்குமேல் வெகு உயரத்திலேயே வாழும். அங்கேயே முட்டையிடும். அம்முட்டைகள் பூமியை நோக்கி விழ வந்து கொண்டிருக்கும் பொழுது கீழே விழாமல் அங்கேயே பொரித்து குஞ்சுகளாகி இறகுகள் முளைத்து வலுவடைந்து உடனே மேல்நோக்கி பறந்து சென்றுவிடுவதால் அவை என்றுமே பூமியைத் தீண்டுவதில்லை. உத்தம பக்தர்கள், உத்தம புருஷர்கள், உயர்ந்த மக்கள் ஆகியோரை இப்பறவைக்கு உதாரணமாகக் கூறுவதுண்டு. சிட்டி, ஜானகி தம்பதியரும் அவர் குடும்பத்தினரும் "ஹோமா" பறவைகளைப் போல என்றும் உயரத்திலேயே இருக்கிறார்கள்.

எனது வாழ்வின் வழிகாட்டி, ஒளிவிளக்காக இருக்கும் சிட்டிமாமா அவர்களுக்கு இதயபூர்வ அஞ்சலி செலுத்துகிறேன். இக்கட்டுரை எழுத எனக்கு வாய்ப்பு கிடைத்ததற்கு எல்லாம்வல்ல இறைவனுக்கு நன்றி கூறி மகிழ்ச்சியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# தமிழ் எழுத்துலகின் துருவ நட்சத்திரம்

சீனி. விசுவநாதன்

நிறை வாழ்வு வாழ்ந்து, சிறப்புகள் பல பெற்று எழுத்துலகில் துருவ நட்சத்திரமாகத் திகழ்ந்தவர் - இன்றும் திகழ்பவர் - அமரர் 'சிட்டி' என்ற பெயரால் அறியப்பட்ட திரு. பெ. கோ. சுந்தரராஜன்.

தமிழ்ச் சிறுகதை உலகில் தமக்கென ஓர் தனியான இடத்தைப் பெற்ற 'சிட்டி' அவர்கள் தமிழ் இலக்கிய வரலாற்றின் உலகிலும் தம்முடைய தனி முத்திரையைப் பதித்தார். 'மணிக்கொடி' காலத்திய எழுத்தாள சிற்பிகளில் 'சிட்டி'க்கு உள்ள பங்களிப்புப் பற்றித் தனித்து பேசப்படுவது உண்டு. 'சிட்டியின் எழுத்துக்கள்' சி. சு. செல்லப்பாவின் 'எழுத்து'விலும் அணி செய்தன. பலராலும் அறிஞர் அண்ணா என்று அழைக்கப்படும் சி. என். அண்ணாதுரை அவர்களுடன் பச்சையப்பன் கல்லூரியில் படித்த பெ. கோ. சுந்தரராஜன் சிலகாலம் பள்ளி ஆசிரியராகவும் வேலை பார்த்தவர்.

அகில இந்திய வானொலி நிலையத்திலும் பொறுப்புகளை மேற்கொண்டவர். அரசாங்க உத்தியோகத்தில் இருந்த போதும் சரி, ஓய்வு பெற்று விட்ட போதும் சரி 'சிட்டி'யின் இலக்கிய ஈடுபாடு தாக்கங்களாகவே பரிமளித்தது. எழுத்துலக ஜாம்பவான்களான பி. எஸ். ராமையா, சி. சு. செல்லப்பா, புதுமைப்பித்தன், தி. ஜானகிராமன் ஆகியோரிடம் நெருங்கிய தோழமை கொண்டிருந்தவர் 'சிட்டி'

'சிட்டி' நிறையப் படிப்பார்; ஆழமாகச் சிந்திப்பார்; அபாரமான நினைவு ஆற்றல் கொண்டவர். செய்வன திருந்தச் செய்வதில் 'சிட்டி'க்கு நிகர் 'சிட்டி'யே!

'சிட்டி' அவர்கள் தம்முடைய சகபடைப்பாளர்களோடு எழுதிய நூல்களாயினும் சரி, தனிப்பட எழுதிய நூல்களாயினும் சரி - அவை ஒவ்வொன்றும் இலக்கியச் சுவை கொண்டனவாகும். 1935-1936 ஆம் வருஷங்களின் வாக்கில், தமிழ்ப் பத்திரிகை உலகில் பாரதியைப் பற்றியும், அவருடைய கவிதைகளைப் பற்றியும் ரசமான விவாதங்கள் நடைபெற்றன. பாரதி ஒரு மகாகவி என்று ஒருசிலரும், தேசியகவி, நல்லகவி என்று வேறுசிலரும் வாதித்தனர். விவாதத்தின் போக்கு திசை மாறியது. விரும்பத்தகாத போக்கில் பிரச்னை 'பட்டிமன்ற'மாக மாறியது.

இந்தமாதிரியான நிலையில் விவாதத்தின் தொடர்ச்சியாக (கு.ப.ரா) கு.ப. ராஜகோபாலன் அவர்களுடன் இணைந்து (சிட்டி) பெ.கோ. சுந்தரராஜன் அவர்கள் பாரதியைப் பற்றிச் சில மதிப்பீட்டுக் கட்டுரைகளை எழுதினர். பாரதி ஒரு மகாகவிதான் என்பதைக் காட்டிய வரையில், அவருடைய படைப்பு இலக்கியங்களிலிருந்து எடுத்துக்காட்டப்பட்டிருந்த பாணியைப் பலரும் அந்த நாளில் பாராட்டி

மகிழ்ந்தனர் என்பது தமிழ் இலக்கியம் கண்ட உண்மை! மதிப்பீட்டுக் கட்டுரைகள் 1937-ன் 'கண்ணன் என் கவி' (பாரதியின் கவிதையும் இலக்கிய பீடமும்) என்ற தலைப்பில் நூலாக்கம் கண்டன.

பாரதியின் கவித்திறத்தைப் பற்றிய பதினொரு கட்டுரைகளும், பாரதியின் இலக்கிய பீடம் எப்படிப்பட்டது என்பதை விளக்கும் பதினெட்டு கட்டுரைகளும் 'கண்ணன் என் கவி' நூலை அணி செய்தன. சொல்லப் போனால், பாரதியைப் பற்றிய முதல் திறனாய்வு நூல் என்ற சிறப்பும் பெருமையும் "கண்ணன் என் கவி" எனும் நூலுக்கு உண்டு! மற்றொரு சமயம், நூலைப் பற்றி திரு. சோ. சிவபாதசுந்தரம் அவர்கள் "பாரதி மகாகவியா, இல்லையா? என்று 1935ம் ஆண்டில் சென்னைப் பத்திரிகையில் 'பகிரங்க கடிதங்கள்' என்ற வடிவில் நடைபெற்ற ஒரு விவாதம், கவிதையையும், கவியையும் விட்டு எங்கேயோ வெகு தூரத்தில் போய்க் கொண்டிருந்த சமயத்தில் கு. ப. ராவும், 'சிட்டி' சுந்தரராஜனும் பாரதியின் கவிதைகளை அலசி ஆராய்ந்து, உலக மகாகவிகளுடன் ஒப்பிட்டு, மதிப்பீடு செய்து 'பாரதி மகாகவிதான்' என்று முடிவு கட்டினர். அது மாத்திரமல்ல, தமிழ் இலக்கிய வரலாற்றிலேயே திறனாய்வு முயற்சியில் ஒரு மகத்தான சாதனையும் செய்து காட்டினார்கள். அதன் பலன்தான் "கண்ணன் என் கவி" என்ற பொருத்தமான தலைப்பைக் கொண்ட நூல்"

என்று பெருமித உணர்ச்சியுடன் குறிப்பிட்டார்.

சிட்டியின் திறனாய்வு - வரலாற்று ஆய்வுக்கு எத்தனையோ சான்றுகளைப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். கு.ப.ரா. அவர்களுடன் இணைந்து திறனாய்வு முயற்சியில் ஈடுபட்டு, சாதனை படைத்த 'சிட்டி' அவர்கள் தி. ஜானகிராமன் அவர்களுடன் சேர்ந்து பயணித்த "நடந்தாய், வாழி, காவேரி"யை யாரே மறப்பர்!

திரு. சோ. சிவபாதசுந்தரம் அவர்களுடனும் சேர்ந்து உருவாக்கிய "தமிழ் நாவல் நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும்" என்ற அரிய நூல் களஞ்சியத்தைத் தமிழ் இலக்கிய நெஞ்சங்களால் மறக்க முடியுமா? இவ்வளவு தூரம் ஏன்? தனிப்பட்டு எழுதிய திரு. சத்தியமூர்த்தி அவர்களைப் பற்றி ஆங்கில வரலாற்று நூலைப் பற்றித்தான் பேசாமல் இருக்க முடியுமா?

இவையும் இவைபோன்ற இன்னபிற நூல்களும், படைப்புகளும் 'சிட்டி'யின் எழுத்து ஆளுமையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை! இது உண்மை; முக்காலும் உண்மை!

திரு. சத்தியமூர்த்தி அவர்களின் அருமைப் புதல்வி
வசுமதி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தோற்றுவித்த
'வாசகர் வட்டத்தின்' சிறப்பு ஆலோசகராகவும்,
நூல்களைத் தெரியும் பணியில் முக்கியமானவ
ராகவும் 'சிட்டி' ஆற்றிய பணி சற்று தாக்கலானது
என்று நண்பர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன்.
நான் அறிந்தவரையில், 'சிட்டி' அவர்கள் விளம்பரம்
தேடாத பாரதி பாரத பக்தராகவே காட்சி தந்தார்
என்பேன். "கண்ணன் என் கவி" படைத்த 'சிட்டி'
1938ம் ஆண்டில் பாரதி பிரசுராலயத்தார் வெளியிட்ட
"ஸ்வசரிதையும் பிறபாடல்களும்" என்ற பாரதி
நூலில் அதுவரை அச்சில் வெளிவராத பாடல்கள்
இருக்கக் கண்டார். கண்ட அளவில் மகிழ்ச்சி அடைந்தார்.
தம் மகிழ்ச்சியை எழுத்தில் வடித்தார். ஆம்.
பாரதியின் புதிய பாடல்கள், அதாவது முதன்முதலாக
அச்சுவாகனம் ஏறிய பாடல்கள் பற்றிய செய்தி
இலக்கிய வாசகர்களுக்குப் போய்ச் சேரவேண்டும் என்கிற
ஆர்வத்தால் உந்தப்பட்ட 'சிட்டி' மதிப்புரையாகவே
எழுதினார். ஆனால், புதுமைப்பித்தன் அவர்களோ
'சிட்டி'யின் மதிப்புரைக்கு மறுப்புரை எழுதினார். என்றாலும்
நட்பு காரணமாகச் 'சிட்டி' பிரச்னையைப் பெரிதுபடுத்தவில்லை.

தமிழக அரசு 1981-82 ஆண்டில் பாரதி நூற்றாண்டு
விழாக் குழு நியமித்தபோது, 'சிட்டி'யும் விழாக்குழுவில்
உறுப்பினராக இடம் பெற்றார்.

தாம் வாழ்ந்த காலத்திலேயே பெரும் புகழும் செல்வமும் ஒருசேரப் பெற்றவர் 'சிட்டி'. அடக்கமான பண்பு நிறைந்த எழுத்தாளர் வரிசைகளில் 'சிட்டி'யின் பெயர் அழியாத ஸ்தானத்தைப் பெற்றுவிட்டது.

'சிட்டி' அமரர்., அவருடைய படைப்புகள் அமரத்துவம் வாய்ந்தவை. 'சிட்டி'யின் பெருமையை எழுத்தின் ஆளுமையை - அவரது படைப்புகள் காலந்தோறும் நிலைப்பூட்டிக் கொண்டே இருக்கும்!



# பேத்தியும் தாத்தாவும்

திருமதி. எஸ். சித்ரா. எம்.ஏ., எம்.பில்., பி.லிட்

இலக்கிய வட்டத்தில் தனக்கென சில நிரந்தர வாசகர்களை உருவாக்கி வாசகம் வட்டத்தின் மணி முடியாய் திகழ்ந்த சிட்டி அவர்களின் பேத்தியான நான் அறிந்த இல சுவையான செய்திகளை உங்கள் முன் வைக்கிறேன்.

நான் 1985-ல் முதுகலை (M.A) தமிழ் இலக்கியம் படிக்கும் போது பலமுறை என் தாத்தாவைச் சந்தித்து உரையாடியதுண்டு. அப்பொழுது எனக்கு பாடதிட்டத்தில் "சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்" என ஒரு தாள் இருந்தது. அதன் தொடர்பாக மிக நல்ல சிறு கதைகளைத் தேர்ந்தெடுத்து படிப்பதற்கான ஆலோசனையை வழங்கியது மட்டுமல்லாமல் என்னைப் போல் அனைத்து மாணவர்களும் பயன் பெற வேண்டும் என எண்ணி ஒரு கருத்தரங்கத்தை மாநிலக் கல்லூரியில் எழுத்தாளர் திரு. சிவபாத சுந்தரம் அவர்களோடு வழங்கினார். அது மட்டுமன்றி தனக்கு கருத்துரைக்காக (REVIEW) வந்த பல அரிய புத்தகங்களையும், தன்னுடைய சொந்த நூலகத்தில் இருந்து சில

புத்தகங்களையும் கொடுத்து, தான் எழுதிய "தாழை பூத்தது" என்ற சிறு கதைத் தொகுப்பையும் சிறப்பாகக் கொடுத்தார்.

மற்றொரு நாள் என்னிடம் பேசிக்கொண்டு இருந்த பொழுது தன்னுடைய வாழ்க்கை வரலாற்றை என்னிடம் கூறுவதாகவும், அதை எழுதி முனைவர் பட்டத்திற்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு கூறினார். ஆனால் எனக்கு அந்த வாய்ப்பு கிடைக்காமல் போனது. காரணம் அப்பொழுது சென்னை பல்கலைக்கழகம் மறைந்த தமிழறிஞர்களைப் பற்றி மட்டுமே ஆய்வுக்கு அனுமதித்ததை நான் என்னவென்பது!

ஆனாலும் என் மனதிற்கு மகிழ்ச்சியை அளிக்கக் கூடிய செய்தியாய் திரு. செட்டி அவர்கள் "இதற்காக நீ வருத்தப்பட வேண்டாம், நான் மனதார, மகிழ்ச்சியோடு "நீ என் இலக்கிய வாரிசு என்று அறிவிக்கிறேன்" என்று அவருடைய மகன் திரு. விஸ்வேஸ்வரன் முன்னிலையில் அறிவித்தார்.

இது வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி பட்டம் பெற்றதற்கு ஒப்பாக எனக்கு மகிழ்ச்சியை அளித்தது. இப்பொழுதும் அவர் ஆற்றிய இலக்கியப் பணியையும், தமிழாசிரியை பணியையும் மிகவும் மகிழ்ச்சியாக ஆற்றி வருகிறேன்!



# நான் பேசிப் பழகாத 'சிட்டி'

## தீபம் என். திருமலை

தீபம் இலக்கிய மாத இதழ் ஏப்ரல் 1965-ல் ஆரம்பமானது. பத்திரிகையைத் தவிர மாதா மாதம் தீபம் அலுவலக மாடியில் "பவர்" என்ற அமைப்பு மூலம் எழுத்தாளர்கள் பலரும் கலந்து கொள்ளும் இலக்கிய நிகழ்ச்சிகளும் நடக்கும். அதில் கலந்து கொள்ளாத எழுத்தாளர்களே இல்லை என்று சொல்லலாம். அந்த வகையில் 'சிட்டி'யும் எங்கள் அலுவலகத்திற்கு வந்திருக்கிறார். நான் பத்திரிகை எழுத்தாளர்கள் மத்தியிலேயே வாழ்ந்ததால் நான் எந்த எழுத்தாளரைக் கண்டும் வியந்தது இல்லை. அவர்கள் எழுத்துக்களைப் படித்திருந்தாலும், எழுத்தைப் பாராட்டி பேசும் வழக்கமும் இல்லை.

பவர் கூட்டம் நடக்கும் முன்பு மாடியைச் சுத்தம் செய்து வைப்பதுதான் என் பணி. தீபம் அலுவலகம் முதல் மாடி. பவர் கூட்டம் நடப்பது இரண்டாவது மாடி. நான் தீபத்தில் அமர்ந்து கொண்டு பவர் கூட்டத்துக்கு வருகிறவர்களை மேலே அனுப்பி வைக்க வேண்டும். அதனால் பவர் கூட்டத்தில் நான் கலந்து கொண்டதே இல்லை என்று தான் சொல்லவேண்டும். கூட்டத்தில் கலந்து கொள்பவர்களுக்கு தேநீர் எதுவும் வழங்கப்படுவதில்லை. கூட்டம் முடிந்த பின்பு நண்பர்கள் தனித்தனி குழுக்களாகப் பிரிந்து

அருகில் உள்ள தர்பார் ஹோட்டலுக்கு டீ குடிக்கவோ அல்லது உடுப்பி கிருஷ்ணவில் காபி குடிக்கவோ சென்று விடுவார்கள். அதன் பின்தான் நான் அலுவலகத்தை பூட்டிக்கொண்டு வீடு செல்லமுடியும். தீபத்தில் அச்சகம் இருந்ததால் பலர் கூட்டங்களுக்கு அழைப்பிதழ் கார்டு அடிப்போம். சமயங்களில் தீபத்திலும் அறிவிப்பு வரும்.

இந்த பலர் கூட்டத்திலேயே இலங்கை, மலேசிய எழுத்தாளர்களுக்கு வரவேற்பு உபசாரமும், தி. ஜானகிராமன் சென்னையிலிருந்து தில்லிக்கு மாறுதல் ஆகிச் சென்ற போது பிரிவுபசார விழா நடத்தியதாகவும் நினைவு! ஆக சிட்டியை தீபம் அலுவலகத்திலேயே பார்த்துள்ளேன். ஆனால் இவர்தான் 'சிட்டி' என்று என்னிடம் யாரும் அறிமுகம் செய்து வைக்கவில்லை. நான் பேசியதும் இல்லை.

முதன் முதலில் வாசகர் வட்டம் வெளியிட்ட 'நடந்தாய் வாழி காவேரி' நூலைப் படித்து மகிழ்ந்தேன். இருவர் சேர்ந்து ஒரு நூலை எப்படி எழுத முடியும் என்பது அப்போது என் சந்தேகமாயிருந்தது. அடுத்து தீபத்தில் சிட்டி, சிவபாத சுந்தரம் இணைந்து ஒரு கட்டுரைத் தொடர் எழுதினார்கள். ஆனால் அதை சிவபாதசுந்தரம் வீடு சென்றுதான் பெற்று வருவேன். சிட்டியைப் பார்த்ததில்லை. தீபம் நின்றதால் அந்தத் தொடரும் பாதியில் நின்றது.

நான் 1980–1990 களில் தினமணியில் மதிப்புரையாளர்.


ஒரு முறை தினமணி நூல் மதிப்புரைக்கு சிட்டி எழுதிய 'கண்ணன் என் கவி' என்ற நூல் என்னிடம் மதிப்புரைக்கு வந்தது. அதற்கு தினமணியில் நான் மதிப்புரை எழுதினேன். பின் அகில இந்திய வானொலியிலும் நூல் மதிப்புரை வாய்ப்பு வந்தது. அதிலும் 'கண்ணன் என் கவி' நூலே மதிப்புரைக்கு கொடுத்தார்கள். மற்றும் இரு நூல்கள். அதில் ஒன்று ஓவியர் ஸாஸாரதியின் ஜோக்குகள். ரேடியோவில் அதற்கு ஒதுக்கப்பட்ட நேரம் 15 நிமிடங்கள். நான் 10 நிமிடம் 'சிட்டி' நூலைப் பற்றியே பேசினேன். மீதி 5 நிமிடத்தில் மற்ற இரு நூல்களையும் விமர்சித்தேன்.

ஏ. என். எஸ். மணியன் 'சிட்டி'யின் 80-90 வயது நிறைவை ஒட்டி அவர் வீட்டில் நடந்த நிகழ்ச்சிக்கு சென்று வந்ததாகக் கூறுவார். எனக்கு நேரடித் தொடர்பு இல்லாமையால் அழைப்பு இல்லை. தகவலும் தெரியாது. அதனால் அதில் கலந்து கொள்ளவில்லை. 'சிட்டி' மணியனுக்கு எழுதிய கடிதத்தைப் படித்துள்ளேன்.

குங்குமம் வார இதழும் சிட்டியைப் பேட்டி கண்டார்கள். பேட்டிக்குச் சென்றவரிடம் ஆர். சி. சம்பத் அவரது நகைச்சுவை நூலான 'மண்ணாங்கட்டி'யைக் கொடுத்திருந்தார். அதை

அவரிடம் இரவல் வாங்கி படித்து மகிழ்ந்தேன். சிட்டியின் இருபுதல்வர்களையும் இலக்கிய கூட்டங்களில் சந்திப்பதுண்டு. ஒருமுறை அவர் மகன்களில் ஒருவரிடம் இருவர் சேர்ந்து (சிட்டி-ஜானகிராமன்-சிட்டி சிவபாத சுந்தரம்) எப்படி எழுதுவார்கள் என்ற சந்தேகத்தினைக் கேட்டேன். சிட்டி விஷயங்களை தகவல்களை சேகரித்து விடுவார். மற்றவர் நடை சிறப்பாக இருக்குமென்பதால் மற்றவர் தி. ஜானகிராமன், சிவபாதசுந்தரம் அதை எழுதத் துவங்குவார் என்று விளக்கமளித்தார். என் சந்தேகம் தீர்ந்தது.

ஆக சிட்டியிடம் எனக்கு நேரடிப் பழக்கம் இல்லாவிட்டாலும் அவர் எழுத்துமூலம் அவரை நன்கு அறிவேன். சிட்டி நூற்றாண்டு விழாவை சிறப்புடன் நடத்த அவர் மகன்கள் முயன்று வருவதாகக் கூறினர். எனக்கு அழைப்பு கிடைத்தால் அந்த விழாவில் கலந்து கொள்ளக் காத்திருக்கிறேன். சிட்டி AIR-ல் பணிபுரிந்ததாகக் கேள்வி. நானும் பதினாறு ஆண்டுகள் AIR-T.V.யில் செய்திப் பிரிவில் தற்காலிகப் பணியாளராகப் பணியாற்றியுள்ளேன் என்பதையும் நினைத்துக் கொண்டேன்.




# கலப்படமில்லாத தூய அன்புக்குச் சொந்தக்காரர்

கொத்தமங்கலம் விசுவநாதன்

எனது தந்தையார் அமரர் கொத்தமங்கலம் சுப்பு அவர்களுடைய மகனாகப் பிறந்தது எத்தனையோ விஷயங்களில் எனக்கு மிகுந்த நற்பலன்களை அளித்தது உண்மை என்று சொல்லிக் கொள்வதில் நான் மிகுந்த பெருமைப் படுகிறேன். அவருக்கு அணுக்கமாகத் திகழ்ந்த பல நண்பர்கள் என்னிடம் காட்டிய பரிவும், அன்பும், அரவணைப்பும் என்னுடைய வாழ்வில் என்னுடைய வாழ்வில் உறு துணையாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட நண்பர்களில் என்றும் என்னை மனதைவிட்டு நீங்காதவர் உத்தமர் செட்டி அவர்கள்.

என்னுடைய முன் தலைமுறையைச் சேர்ந்தவர் என்பதால் அவரோடு நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்புகள் எனக்கு அதிகம் இல்லை என்றாலும் தன்னுடைய கலப்படமில்லாத தூய அன்பால் குளிப்பாட்டி திக்கு முக்காட வைத்து விடுவார். பழுத்த பழமாக தொண்ணூறு வயதைக் கடந்த நிலையில்,

சென்னை பெசண்ட் நகர் ரத்னகிரீஸ்வரர்
ஆலயத்தில் அவருடைய மகன் வேணுகோபால்
ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் நான்
பேசத் துவங்குவதற்கு முன்பு அவரை வணங்கிய
என்னைத் தட்டிக் கொடுத்து ஆசிர்வதித்து,
பின் நிகழ்ச்சி முழுவதும் கேட்டு
இறுதியில் அந்த தள்ளாத வயதில் தனக்கும்
என் தந்தையாருக்கும் ~~[illegible]~~ இருந்த
தொடர்புகளை நினைவு கூர்ந்து, என்னையும்
மனதாரப் பாராட்டியதையும் இன்றும்
என்னால் மறக்க முடியாது. தமிழுக்கு அவர்
செய்துள்ள தொண்டு என்றும் நிலைத்திருக்கும்.
அவர் புகழ் என்றென்றும் வாழியவே!



# பெ.கோ.சுந்தரராஜன் எப்பொழுது சிட்டியானார்?

"ரா. கோவிந்தன்"

பெரியகுளம் கோவிந்தசாமி சுந்தரராஜன் 'சிட்டி'யாக எவ்வாறு அறிமுகமானார்? ஆம். 1925-30ல் எங்கள் குடும்பம் அத்திராலில் இருந்தது. நான் அப்பொழுது பிறக்கவில்லை. பின் வருவன எல்லாம் கேள்வி ஞானம் தான்!

எனது தமையனார் ராமகிருஷ்ணன் சிறு குழந்தைப் பருவத்தில் நல்ல பொன்னிறமும் சுருட்டைமுடியுமாய் வசீகரமாய் இருப்பார். குழந்தை ராமகிருஷ்ணனை வீட்டுத் திண்ணையில் உட்காரவைத்து பாட்டிஅம்மா தண்ணீர் எடுத்துக் கொண்டிருப்பார். அங்கு வரும் பெண்கள் அவனை எடுத்துச் செல்லமாக 'சிட்டிபாபு' என்று கூறி கொஞ்சுவார்கள். நாளடைவில் ராமகிருஷ்ணனின் பெயர் 'சிட்டிபாபு' என்றே நிலைத்துவிட்டது.

எனது தந்தை ராமலிங்கம் ஐயர் மீது (அதாவது சுந்தரராஜனின் தமக்கை நாகம்மாளின் கணவரான எனது தந்தையிடம்) அளவுகடந்த அன்பும் மரியாதையும் கொண்டவர்

அந்த நாராயணனை எழுத ஆரம்பித்த பொழுது எந்த தலைப்பில் பெயரை புனைப் பெயராக கொண்டு 'சிட்டி' என்ற பெ. கோ. சுந்தரராஜன் ஆனார்.

எவராயினும் தனது திறமையாலேயே முன்னேற வேண்டும் என்ற கொள்கை கொண்டவர் சுந்தரராஜன். அந்தக்காலத்தில் நான் ஒரு குட்டி மேடைப்பேச்சாளனாகத் திகழ்ந்தேன். அரியலூரில் ஆறாவது வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது திருச்சியில் சிதம்பர பாரதியால் "ஸ்ரீ விநாயகா கலைக் கழகம்" என்ற இலக்கிய அமைப்பு மிகவும் திட்டமிட்டு சான்றோர் பலரை அழைத்து இலக்கிய கூட்டங்களை அவ்வப்போது நடத்தி வந்ததுமட்டுமல்லாமல் ஸ்ரீ விநாயகர் என்ற பத்திரிகையையும் வெளியிட்டு வந்தது. அத்தகைய இலக்கிய கூட்டங்கள் நடைபெற 'சிட்டி' மாமாவின் பரிபூரண ஆசிகளையும் ஆலோசனைகளையும் அந்த அமைப்பு பெற்றது.

இந்த 'சிட்டி' நினைவுக் கோர்வையை மிகப் பெரிய ப்ரயத்தனத்துடன் வெளிக்கொண்டு வந்திருக்கும் திரு. கி. ராகவன் அவர்களின்

பங்களிப்பும், உழைப்பும் இணக்கிய கூட்டங்
களின் சிறப்பிற்கு பெரிதும் துணை
புரிந்தன. அச்சமயத்தில் நான் திருச்சியில்
எனக்கு பேச வாய்ப்பு கொடுப்பார்கள்
அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி திரு. தொ.மு.
பாஸ்கரத் தொண்டைமான் தலைமையில்
நடந்து கொண்டிருந்தது. எனது முறையும்
வந்தது. மிகக் குள்ளமாக இருந்த என்னை
அந்த மேஜை மறைத்து விட்டது ~~அவர்~~
அவருடைய பார்வையிலிருந்து!
தலைவர் 'திரு. தொண்டைமான்' அவர்கள்
பேச்சாளர்கள் எனை அறிவித்து விட்டு
என்னைத் தேடலானார்! குள்ளமாக
இருந்த என்னை அப்போது அங்கு
இருந்தவர்கள் உயர்த்திக் காட்ட,
அந்தக் கூட்டம் சிரிப்பால் களை
கட்டியது! எனது பேச்சும் மிக
நன்றாக இருந்தது என்ற பாராட்டுதலையும்
பெற்றேன்!

அந்தமாமா அவர்கள் அப்பொழுது
திருச்சி வானொலி நிலைய ஆசிரியராக
இருந்தார். ரேடியோ நிலையத்தில் மிகவும்
செல்வாக்கு உடையவராக இருந்தாலும்

சொந்த அக்காமகளுக்கே என்னை
வானொலியில் பேச சிபாரிசு செய்யமாட்டார்!
அந்த ரேடியோ நிலையம், அதில் வானொலி
பரப்பப்படுவது இவைகளைப் பார்க்க எனக்கும்.
எனது தம்பி பாபுவுக்கும் மிகுந்த ஆசை. மாமா
அவர்களைக் கேட்டோம். அவர் "ரேடியோ
அண்ணா' என்ற புனைப்பெயரில் குழந்தைகள்
நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருந்தவரிடம்
(அவரது பெயர் திரு. விஸ்வநாதன் என்று
பின்னால் தெரிந்து கொண்டேன்) அனுமதி
வாங்கி, அவருடன் அனுப்பி வைத்தார்.
எங்களுக்கு மெத்த ஒரு நப்பாசை!
நாமும் ரேடியோவில் பேச வாய்ப்பு
கிடைக்காதா என! ஆனால் மாமா ரேடியோ
அண்ணாவிடம் "இவர்கள் வாயைத்
திறந்தால் கழுத்தை நெரித்து விடுங்கள்"
என விளையாட்டாக, ஆனால் உறுதியாகச்
சொல்லி அனுப்பி வைத்தார்.

அது ஒரு ஞாயிற்றுக்கிழமை. அன்று தான்
உயர்நிலைப் பள்ளிக் குழந்தைகள் நடிக்கும்
நாடகம் ஒலிபரப்பப்படும். அந்தக் குழந்தைகளுடன்
சேர்ந்து ரேடியோ அண்ணா எங்களையும்
ஸ்டுடியோவிற்குள் அழைத்துச் சென்றார்.

அவர் ஒரு நாடக உரையாடலை அந்தப் பள்ளி மாணவர்களிடம் கொடுத்து படிக்கச் சொன்னார் ஆர்வத்துடன்! ஆனால் எங்கள் அதிர்ஷ்டமோ என்னவோ ஒரு மாணவன் கூட சரியாகப் படிக்கவில்லை! அவர் அந்த வசனத்தை எங்களிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னார். நாங்கள் இருவரும் முதல் முறையிலேயே மிக நன்றாகப் படித்துவிட்டோம். அவர் மிகவும் திருப்தி அடைந்து அந்த நாடகத்தில் முக்கியமான பங்கை எங்களுக்குக் கொடுத்தார். நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் அந்த நாடகத்தில் பங்கேற்றோம்.

எங்கள் குரல் வானொலியில் கேட்ட எங்கள் சுற்றத்தார் எங்களைப் பாராட்டினார்கள். எங்களுக்குச் சன்மானமாக நிறைய அன்பளிப்புகளைக் கொடுத்து அனுப்பிவைத்தார் ரேடியோ அன்று! வீட்டிற்குச் சென்று அதை எல்லோருக்கும் காட்டி பெருமை அடைந்தோம்.

மாமா அவர்கள் இயல்பாகவே மிகவும் நகைச்சுவை நிறைந்தவர். ஆனால் பிறர் மனம் நோக ஒருபோதும் எந்த "ஜோக்கும்" அடிக்கமாட்டார்.

எப்பொழுதும் மகிழ்ச்சியுடனும் சிரித்த முகத்துடனும் இருப்பார். இவர் எழுத்துக்களிலும் இது பிரதிபலிக்கும்! இவர் எழுதிய கட்டுரைகள் கூட 'குபீரென' சிரிப்பை வரவழைக்கும். அவற்றில் 'குறள்வர்' என்ற கட்டுரை நல்ல நகைச்சுவையுடன் அமைந்தது. அதில் ஒரு தம்பதியர் ('ஆதி-பகவன்' வரலாறு) தங்களுக்கு அப்பொழுதே பிறந்த ஆண் குழந்தையை சீராட்டும்பொழுது அது திடீரென நல்ல தமிழில் கவி பாட, அதற்குப் பேயோ, பிசாசோ பிடித்து விட்டதென, அந்தக் குழந்தையை அங்கேயே போட்டுவிட்டு அவரவர் அடித்துக் கொண்டு ஓடிவிட்டனர். அந்தக் குழவி பிறகு பெரியவனாகி, ஒரு நாள் மயிலாப்பூர் பஸ் ஸ்டாப்பில் பிற பயணிகளுடன் குறிப்பிட்ட தடம் பஸ்ஸிற்காக காத்திருக்க நிற்க, அந்த தடம் வண்டியில் இடம் காலியாக இருந்தும் கூட அந்த நிறுத்தத்தில் நிற்காமல் வேகமாகச் செல்ல (இது சென்னைப் பேருந்து அமைப்பின் விசேஷ குணம்) சினந்த சினம் கொண்ட அந்தப் பையன், உடனடியாக ஓர் வசனகவி பாட, அந்தப் பேருந்து தீக்கிரையாகப் போனதாம்! அந்த நிகழ்ச்சியால் இவர் உருவாக்கிய குறள்களுக்கு 'புறள்' என்றும், இவருக்கு 'புறள்வர்' என்ற காரணப் பெயரும் உண்டாயிற்று என ஒரு சாரார் கூறுவர்" என வர்ணித்திருந்தார்!

நாங்கள் சகோதரர்கள் பத்துப்பேர், சிறந்தியாம்
செல்வப் புதல்விகள் ஆறுபேரும் அழகுடை
மாமா வீட்டிற்கு ஹாஜயம் செய்ய 'மாமா
அவர்கள் "பதினாறும் பெற்று "பெரும் வாழ்வு"
வாழ்ந்தார்! அந்தச் சகோதரிகளில்
மூத்த இருவர் நல்ல குரல் இனிமை
பெற்றவர்கள். ஆகையால் மாமாவின்
ஜநலாண்டு பாட்டுக்களை, பல மேடைகளிலும்
இசையுடன் பாடி பாராட்டுக்களைப் பெறுவர்.

'வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்' என்ற
பாடலை முழுவதுமாக மாற்றி 'பாவத்தின் மீது
மயிலாடக் கண்டேன், மயில் மெய்யாச் சுழல்'
எனவும், பாரதியாரின் "அழகுத் தெய்வம்"
என்ற கவிதையை மாற்றி வெள்ளையை விவரிக்கும்
பாட்டாக எழுதியிருந்தார். ஆடி பதினெட்டாம்
பெருக்கு' என்பது திருச்சி, மற்றும் காவேரி
நதிக்கரையில் உள்ள ஊர்களில் மிகவும்
பிரசித்தி பெற்ற விழாவாகும். ஆடி மாதம்
பதினெட்டாம் நாள் காவேரியில் மடைதிறந்து
நீர்வர, அது வெள்ளப் பெருக்காக
இருகரைகளையும் தழுவிக் கொண்டு விவசாயிகள்
மனம் குளிர ஓடும். இங்கு உள்ள மக்கள்
அந்நாளில் உணவு வகை வகையாகச்
சமைத்து காவேரிக்கரைக்குச் சென்று

நதியை தெய்வமாக பார்த்து , பூஜைகள் முடித்து நதியால் புரண்டோடும் வெள்ளத்தை ரசித்துக்கொண்டே உண்பர்! இந்த அழகை மாமா "ஆடிப்பதினெட்டிதுவே ஆடி வரும் வெள்ளம் ..... கரையுள்ள இரு கரையைக் கட்டிடவும் போதும்" என்ற பாட்டில் வர்ணித்தார்.

ஒரு நல்ல மனமுள்ள கவிஞர். எல்லோருக்கும் உதவுவதே அவரது கொள்கை! வறுமையில் வாடிக்கொண்டிருந்த பல எழுத்தாளர்களுக்கு பொருளுதவி செய்து மகிழ்ந்தவர். அவரது மருமகள் என சொல்லிக் கொள்வதில் நான் மிகவும் பெருமை கொள்கிறேன்!



# முதுபெரும் எழுத்தாளர்

## 'சிட்டி'

### 'ஏ. என். எஸ். மணியன்'

'சிட்டி 95' என்ற தலைப்புடன் என் விலாசத்துக்கு ஒரு அழைப்பிதழ் வந்தது. நான் வியப்புடன் அதை வாங்கிப் படித்துப் பேரானந்தம் அடைந்தேன். திரு. சிட்டி (என்கிற பெ. கோ. சுந்தரராஜன்) அவர்கள் 95-வது பிறந்த நாள் அழைப்பு அது. மிக நெருங்கிய நண்பர்கள் மற்றும் உறவினர்கள் மற்றும் உறவினர்கள் சேர்ந்து எளிய முறையில் அவருக்கு மரியாதை செய்து ஆசீர்வாதம் பெற்றார்கள்.

இதற்கு எனக்கேன் அழைப்பு? அதுதான் அந்தப் பெரிய எழுத்தாளரின் பண்பும் அன்பும். நான் திருவல்லிக்கேணி பிள்ளையார் கோவில் தெருவில் சிறிய சிற்றுண்டிக்கடை வைத்திருந்த தெருவிலேயே எழுத்தாளர் திரு. சி. சு. செல்லப்பா அவர்கள் குடி இருந்தார். அவரைப் பார்க்க திரு. சிட்டி அவர்களும் அவருடைய மூத்த மகனும் வந்திருந்தார்கள். அச்சமயம் திரு. சி. சு. செ. சிட்டி அவர்களுக்கு என்னை அறிமுகப்படுத்தினார். 'சிட்டி'யை வணங்கியபடியே 'ஸார் உங்களுடைய அந்தி மந்தாரை சிறுகதை படித்தேன். எத்தனை ஆண்டுகளுக்கு முன் படித்த மறக்கமுடியாத கதை' என்றேன். உடன் செல்லப்பா 'இவர் பெரிய இலக்கிய ரசிகர்' என்று என்னை காண்பித்தபடியே சொன்னார். சிறிது நேரம்

பேசிக் கொண்டிருந்து விட்டு, அவரிடம் என் விலாசம் தொலைபேசி எண்ணும் கொடுத்து விட்டு வந்து விட்டேன்.

திரு. சி.சு. செல்லப்பா மறைந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. கிட்டு அவர்களின் 95-வது பிறந்தநாள் (16.5.2004) என்று அழைப்பு வந்திருந்தது. எனக்கு செல்லப்பாவின் அடுத்த வீட்டுக்காரன் என்ற தகுதியும், தமிழ் வாசகன் என்ற தகுதியையும் தவிர வேறொன்றும் இல்லை.

நான் ஒரு அங்கவஸ்திரமும் என் கடைப் பட்சணங்களும் எடுத்துக் கொண்டு விழா நடந்த இடத்திற்குச் சென்றேன். கிட்டு அவர்களுக்கு அங்கவஸ்திரத்தை அணிவித்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து பட்சணத்தையும் கொடுத்தேன். அவர் மிக்க மகிழ்ந்து செல்லப்பாவின் மனைவி எங்கிருக்கிறார் என்று கேட்டார். தன் மகனிடத்தில் பெங்களூரில் இருக்கிறார் என்றேன். அங்கே எழுத்தாளர் நரசய்யா அவர்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவர் என்னை அழைத்துக் கொண்டு சிற்றுண்டி சாப்பிடும் இடத்திற்கு சென்றோம். எல்லோருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. சிற்றுண்டி விருந்து முடிந்து நான் அவர்களிடம் விடைபெற்று வந்து விட்டேன்.

அப்பொழுது நான் ஜெமினி ஸ்டுடியோ கேண்டீனில் வேலை பார்த்த நாட்களில் (சுமார் 11 வருடம்) எனக்கு ஏற்பட்ட அனுபவங்களை ஒரு சிறு நூலாக வெளியிட்டிருந்தேன். 130 பக்கங்கள். ஜெமினி கேண்டீன் என்ற பெயரிலேயே அந்தப் புத்தகம் ஒன்றை திரு. சிட்டி அவர்களுக்குக் கொடுத்தேன். மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டார் அவர். ஒரு வாரம் கழித்து எனக்கு ஒரு இன்லேண்ட் கடிதம் வந்தது. அதைப் பிரித்துப் படித்ததும் எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை அளவிட முடியாது. எவ்வளவு பெரியவர், எவ்வளவு பெரிய உள்ளம், எவ்வளவு பெரிய அன்பு.

அந்தக் கடிதம் இப்படி ஆரம்பித்தது - நீங்கள் அன்புடன் கொடுத்த இரண்டு பரிசுகளில் எது புத்தகம் எது பட்சணம் என்று பிரித்துப் பார்க்க முடியவில்லை. இரண்டுமே அவ்வளவு சுவைமிக்கவை. நண்பர் ஏ.என்.எஸ். மணியனுக்கு நமஸ்காரம். (இங்கே சிட்டி அவர்கள் பண்பின் சிகரமாகிறார்) நேற்று இரவு Party முடித்து வீட்டுக்கு வந்தவுடன் உங்களுடைய ஜெமினி கேண்டீன் புத்தகத்தை மேலெழுந்த வாரியாகப் பார்த்துவிட்டுப் பின்னர் ஆழ்ந்து படிக்கலாம் கையில் புரட்டினேன். முதல் பக்கத்தில் இருந்தே என் கவனம் முழுக்க இழுக்கப்பட்டதால்

தொடர்ந்து படித்தேன். புத்தகத்தை முடிக்கும் பொழுது அதிகாலை 3-45 மணி இருக்கும். இந்த புத்தகத்தில் உங்களுடைய உணவுக்கலை கைவண்ணத்துடன், திரு. எஸ். எஸ். வாசனின் பன்முக ஆளுமை ஆங்காங்கே எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. ஒரு சிறப்பான கைங்கர்யம். இரவில் சூட்டிங் நடக்கும்போது எல்லோருக்கும் நீங்கள் தயாரித்துக் கொடுத்த பொங்கல் பற்றிய வர்ணனையை படிக்கும்பொழுது அந்தப் பொங்கலையே ருசித்து சாப்பிட்ட நிறைவு ஏற்படுகிறது.

நீங்கள் ஒரே நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்ததால் உணவுக்கலை நிபுணர்களான அப்பாசாமி ஐயர், திருவையாறு அகோரம் ஐயர், அறுசுவை அரசு நடராஜன் போன்றவர்களைப்போல் உங்களைப்பற்றி அதிகம் வெளியில் தெரியவில்லை என்று தோன்றுகிறது. அதை இந்தப்புத்தகம் ஈடு செய்து விடும். இவ்வாறு சிட்டி அவர்கள் கைப்பட எழுதிய கடிதம் என்னை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது என்று நான் சொன்னால் அது மிகையல்லவே!

திரு. சிட்டி அவர்கள் தி.மு.க. ஸ்தாபகரும், மறைந்த முன்னாள் முதல்வருமான திரு. சி.என். அண்ணாதுரை அவர்களின் கல்லூரித் தோழர்.

அண்ணா அவர்கள் முதல்வரானதும் முதல் பத்திரிகை நிருபர் கூட்டத்தில் அண்ணா அவர்கள் இவரை அடையாளம் கண்டு இவருடைய இனிஷியலைக் கொண்டே 'பி.ஜி.' என்று உரக்கக் கூப்பிட்டு அருகில் அழைத்து நலம் விசாரித்ததையும், தன்னுடன் உரையாடியதையும் அண்ணா அவர்களின் பண்பையும் கண்டு தான் மிக மகிழ்ந்ததாகவும் 'சாதாரண மனிதன்' என்ற தன்னுடைய நூல் ஒன்றில் குறிப்பிட்டு எழுதியிருக்கிறார் திரு. சிட்டி அவர்கள்!

# தளும்பாத நிறைகுடமாய்த் தமிழ்ப்பணியாற்றிய 'சிட்டி'

## உ.ரா. வரதராஜன்

20-ஆம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய வரலாற்றில் தனக்கெனத் தடம் பதித்த ஒரு தலைமுறை எழுத்தாளர்கள் 'மணிக்கொடி காலம்' என்ற ஒரு சகாப்தத்திற்கே சொந்தமானவர்கள். அந்தத் தலைமுறையில் ஒருவராகப் பெருமையுடன் இலங்கியவர்தான் சுந்தரராஜன் என்ற இயற்பெயரைக் கொண்ட 'சிட்டி'.

'தாயின் மணிக்கொடி பாரீர்' என்ற பாரதியின் கவிதை வரிகளிலிருந்து எடுத்த பெயரோடு 1933-ம் ஆண்டில் துவக்கப்பட்ட பத்திரிகையில் இணைந்து, தங்கள் தமிழ்ப்பணியை மேற்கொண்ட ஒரு எழுத்தாளர் கூட்டம் தான் 'மணிக்கொடி காலம்' என்ற ஒரு முத்திரையைப் பதித்தது. 46 இதழ்களை மட்டுமே வெளிக்கொணர்ந்த பின்னர் மணிக்கொடி தனது பயணத்தை 1939-ஆம் ஆண்டில் முடித்துக்கொள்ள நேரிட்டது. ஆனாலும் மணிக்கொடி காலத்திய எழுத்தாளர்கள் அதன் மரபை வழுவாது முன்னெடுத்துச் சென்று தங்கள் ~~தொடர்ந்தனர்~~. படைப்புகளைத் தொடர்ந்தனர்.

கே. சீனிவாசனின் முன்முயற்சியில் வ.ரா. அவர்களை ஆசிரியராகக் கொண்டு துவக்கப்பட்ட மணிக்கொடி இதழில் தொடர்ந்து எழுதியவர் சிட்டி. பி.எஸ்.ராமையா, புதுமைப்பித்தன், கு.ப. ராஜகோபாலன், ந. பிச்சமூர்த்தி, தி.ஜ.ரங்கநாதன், சி.சு. செல்லப்பா, க.நா. சுப்ரமணியன், கி.ரா, ந. சிதம்பர சுப்பிரமணியன், பி.எம். கண்ணன், எம்.வி. வெங்கட்ராம், சங்கு சுப்ரமணியன், சுந்தா என்று சிட்டியோடு சேர்த்தெண்ணப் படுகிற மணிக்கொடி சிறுகதை எழுத்தாளர்கள் என்ற ஒரு வரிசையே உண்டு.

பாரதியை உலகமகாகவிகளில் ஒருவராக முன் நிறுத்தி சிட்டி எழுதிய கட்டுரைகள் பாரதிக்குப் பெருமை சேர்த்ததோடு, உலகளாவிய இலக்கியப் பார்வை சிட்டிக்கு இருந்ததையும் வெளிப்படுத்தியது. கு.ப.ராஜகோபாலனோடு இணைந்தும், தனியாகவும் பாரதியைப் பற்றிய பல திறனாய்வுக் கட்டுரைகளை சிட்டி படைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

சிட்டியும், தி.ஜானகிராமனும் இணைந்து தலைக்காவிரி முதல் பூம்புகார் வரை காவிரியின் பயணத் தடத்தோடு சென்று சுற்றிப் பார்த்து,

காவிரியின் நதிக்கரை நாகரீகத்தையும்,
அதனோடு தொடர்புடைய வரலாற்று
நிகழ்வுகளையும் கண்டு உணர்ந்து
'நடந்தாய் வாழி காவேரி' என்ற பெயரில்
ஒரு சிறப்புமிக்க நூலைப் படைத்தனர். இது
ஆங்கிலத்தில் உலகப் பிரசித்தி பெற்ற
'பெங்குவின்' பதிப்பகத்தால் 'ETERNAL
KAVERI' என்ற பெயரில் மொழியாக்கம்
செய்யப்பட்டு பிரசுரிக்கப்பட்டது.


இலக்கியத் திறனாய்வுத் துறையிலும்
சிட்டியின் பங்களிப்பு அற்புதமானது.
இலங்கைத் தமிழ் இலக்கியவாதிகளால்
நன்கறியப்பட்ட ஒருவரான சிவபாத
சுந்தரத்தோடு சேர்ந்து சிட்டி தனது
திறனாய்வுப் பணிகளை மேற்கொண்டிருந்தார்.
1977-ல் வெளியான 'தமிழ் நாவல்
நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும்' என்ற
ஆய்வுநூல் இந்த இருவரும் இணைந்து
படைத்த இலக்கிய வரலாற்றுப் பெட்டகமாகும்.

பள்ளி ஆசிரியராகத் தன் வாழ்க்கையைத்
தொடங்கிய சிட்டி அகில இந்திய
வானொலியின் திருச்சி நிலையத்தில்
பணியாற்றியவர். கிருஷ்ணமூர்த்தி - லட்சுமி

தம்பதியர் தொடங்கிய "வாசகர் வட்டம்" என்ற பதிப்பகத்தின் ஆலோசகராகப் பொறுப்பேற்று இலக்கியத் தரம் வாய்ந்த பல நல்ல படைப்புகள் வெளிக் கொணரப் படுவதில் 'சிட்டி' ஆற்றியிருந்த பங்கு சிறப்புக்குரியது.

சிட்டி ஒரு சிறந்த மொழிபெயர்ப்பாளரும் கூட. அவர் தமிழாக்கம் செய்து வெளியிடப்பட்ட ஆங்கில நூல்கள் பல உண்டு. சிட்டியின் பூர்வம் இலக்கியத்தையும் தாண்டி பன்முகத் தன்மை வாய்ந்தது என்பதை அவர் மொழி பெயர்க்க எடுத்துக்கொண்ட புத்தகங்களை எடுத்துச் சொல்லும்.

பாரதி, பாரதிதாசன் படைப்புகளிலிருந்து தொடங்கி பெயரறியப் படாத நாட்டுப்புறப் பாடல்கள் வரை தமிழ் கவிதையும் நல்லுலகிற்கு சிட்டி அறிமுகப் படுத்திய பதிவுகள் ஏராளம், ஏராளம். ஆரவாரம் இல்லாமல், அமைதியாக, தனது அழுத்தந் திருத்தமிக்க தமிழுக்குப் பெருமை சேர்க்கும் இலக்கியப் பணியை ஆற்றிய சிட்டியைத் தளும்பாத நிறைகுடமாய்த் திகழ்ந்த ஒரு போற்றுதற்குரிய எழுத்தாளர் என்று சுட்டுவதில் அது எள்ளளவு கூட மிகையாகாது!



# MY FOND MEMOIRS OF CHITTI

C.V. SUBRAMANIAN

My association with Sri P.G. Sundararajan (Chitti) started in the year 1960 When I was doing my first year B.Sc. degree Course. His Second Son Sri S. Govindarajan is my Classmate in B.Sc. That time Sri P.G.S was staying in 9, Sambandan Street in Mandaveli, Madras 28 and was working for All India Radio.

First few years, I did not get any chance to ~~talk~~ talk to him since he was a busy person both officially and in the literary circles. My association with that family grew day by day and I have almost become one in that family. I think in one of Sow. Rajeswari's (Sister of Sri Govindarajan and only daughter of PGS) birth day function, I was invited for Lunch. It was my usual habit to present Something whenever I am invited for a function. Hence I think I presented to Sow Rajeswari a nice

dress material. When PGS came to know about that, he asked Govindarajan "Who is this boy CV" (I am generally called as CV). This boy seems to have good manners. That was the first occasion PGS started knowing about me.

Generally PGS I think do not use his influence to recommend somebody to get a job. Unusually when PGS came to know that I had for a technical post in All India Radio, he asked for copies of my certificates and application. After few months, he told me that I will be getting the interview call. I attended the interview and got selected also. But unfortunately the Pakistan war came at that time and Central government stopped all recruitments.

After this incident I used to talk to him whenever I visited his house. That time to get attestation on certificates from Gazetted officers was a problem

Since the number of officers were few. All Govindarajan's friends used to give their Certificates for attestation to PGS. But PGS won't sign them immediately. He will make us wait for few days. After many reminders by Govindarajan the Certificates will be signed. We ~~will all~~ were all afraid of talking to him straight since he was considered to be a terror, a person of few words and his looks also will be like that.

When I shifted to Bombay in 1968 after taking up a ~~f~~ job in Bhabha Atomic Research Centre, PGS came to Bombay. At that time he was working for Films Division and he was in charge of making a documentary film on Paramacharya of Kanchi Mutt. He stayed with me and my elder brother for 3 days. This visit made me to understand him more. I am an admirer of his command over English language. He was also conscious of it and some sort of ego was also there in him.

This aspect Sri PBS must have realised when he visited Paramacharya at Kancheepuram to show his writing and his approval of the Commentary written about Paramacharya for the Films Division. I understood from his family people that Paramacharya asked Chitti to read it and at many places paramacharya corrected the English usage by suggesting better appropriate words. This knowledge of Paramacharya baffled 'Chitti' and from that day onwards 'Chitti' became a staunch follower of Acharya. He made it a point to attend Acharya's birth day celebration wherever it was conducted. At Paramacharya's insistence only Chitti wrote the book on "Nadanthai Vazhi Kaveri". In this context only, when Paramacharya was in Sattara, Maharashtra, myself, my wife, Govindarajan's family and 'Chitti' went to Sattara to attend Swamy's birth day function. This trip of mine with 'Chitti' was a memorable one.

Because of my close association with Chitti's family, I had at least the opportunity to see great writers like La. Sa. Ramamirtham, T. Janakiraman, Si. Su. Chellappa, Manikodi Srinivasan, Kalusakaram Rajagopal and many others.

Sri. P.G.S was a great admirer of Carnatic Music and Madurai Mani Iyer. PGS and Madurai Mani Iyer were close friends. In spite of all his great qualities, PGS some how created an atmosphere of terror around around him (I may be wrong in my observation) and created a feeling that he is not easily approachable. In fact his elder son Sri Visweswaran used to tell ~~us~~ us that Emergency was enforced in their house long before Smt. Indhira Gandhi did it.

I was fortunate to attend Sri PGS 95th birth day celebrations where only very few people were invited. I felt proud that I was one of them. ~~When~~ Whenever I visit Sow. Rajeswari's house at Thiruvanmyur where PGS was staying during his fag end of

his life, hearing me talking to Sri. Visu in the hall. P.G.S' used to call from the bedroom "Send that fellow inside". I could earn that closeness with 'PGS' after many years of contact.

During my long association with Sri P.G. Sundararajan, I rank him as one of the best Patriot of the Country (he had participated in the Salt Satyagraha movement), a great Scholar in Tamil and in English, and a person of integrity and great lover of friends. He was a person with moral courage to face jeers, disapproval, unpopularity & hatred, for what is right!

# 'சிட்டியின் அன்பும் அக்கறையும்'

## 'ராவ்'

அது 1954-ம் ஆண்டு. தஞ்சை மாவட்டம் (இப்போது நாகை) குத்தாலம் என்கிற அழகான வண்ண வயல் சூழ்ந்த கிராமத்தில் எங்கள் குடும்பம் இருந்தது. அந்த ஆண்டு என் அக்காவான சுசீலாவின் திருமணம். இரண்டு வீடு சேர்த்து பெரிய பந்தல். அதற்கு ஏராளமான உறவினர்கள் வந்தனர். அன்று தெருவில் உள்ள மாமாக்களுக்கு எல்லாம் அந்த திருமணத்திற்கு எழுத்தாளர்கள் வர இருப்பதாக செய்தி பரவி ஆவலுடன் காத்திருந்தனர்.

எங்கள் எதிர் வீட்டில் தி. ஜானகிராமன் இருந்தார். குத்தாலம் போர்டு ஹைஸ்கூலில் அவர் மேல் வகுப்புக்கு ஆசிரியர். அவர் வீட்டில் தான் வரஇருக்கும் எழுத்தாளர்கள் தங்க ஏற்பாடு. என்னுடைய அத்திம்பேர் (அண்மையில் 85 வயதில் மறைந்தார்) கிரு.
பிரிட்டிஷ் ஹைகமிஷனர் பத்திரிகைத் தொடர்பு அதிகாரியாக இருந்தார். அவருடன் திருமணத்திற்கு சிட்டி என்கிற சுந்தரராஜன், ஆர்.வி. நாடோடி ஆகியோர் வந்திருந்தனர். தி. ஜானகிராமன் வீட்டுத் திண்ணையில் அழகான ஜமக்காளம் விரிக்கப்பட்டு சீட்டாட்டம் நடந்தது.

திருமணத்திற்கு வந்த இந்த மேவரும் பின்னர் பள்ளியில் மாணவர்களிடையே பேசினார். அன்று ஜானகிராமன் அழகாக பாரதியின் பாடலை கடவுள் வாழ்த்தாகப் பாடினார். கட்டிப் பேசியது ஞாபகத்தில் இருக்கிறது. 'காவிரி ஓடுகிறது உங்கள் ஊரில். உங்கள் பள்ளியின் பின்னேயும் ஓடுகிறது. வீசும் காற்றில் காவேரி நீரின் மணம் வீசுகிறது' இப்படி ஒரு அற்புதமான சூழ்நிலை உள்ள பள்ளியில் படிக்கிறீர்கள்.

'உங்கள் எல்லோருக்கும் நீச்சல் தெரியுமா? தெரியாவிட்டால் தெரிந்து கொள்ளுங்கள். நாளைக்கு வாழ்க்கையில் எதிர் நீச்சல் அடிக்க வேண்டியிருக்கும் - படிக்கும்போது ஏற்படும் நட்பு முக்கியமானது. மாணவப் பருவத்தில் நட்பும், இலக்கிய ஆர்வமும் மிக அவசியம் --" இப்படி பேசினார். எனக்குள் இந்தப் பேச்சு ஆழமாகப் பதிந்தது. பள்ளி நண்பர்களை இன்றளவும் மறக்கவில்லை. எழுத்து ~~[illegible]~~ ஆர்வமும், இலக்கிய ஈடுபாடும் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது. இப்போதும் அடிக்கடி [illegible] செல்வேன். நான் வசித்த வீடும் இல்லை. நண்பர்கள் பிரிந்து மறைந்துவிட்டனர்.

காவிரி ஓடுகிறது. பள்ளி நிமிர்ந்து நிற்கிறது. நான் பள்ளியில் நுழைந்து பக்கம் ஓடும் காவிரியைப் பார்த்து நிற்பேன். 'சிட்டி' பேசியவை ஞாபகத்துக்கு வரும்.

பிறகு பலப்பல ஆண்டுகள் சென்று 1967-ல் சிட்டியை அறிஞர் அண்ணாவின் இல்லத்தில் சந்தித்தேன். உலகத் தமிழ் மாநாடு ஏற்பாடாகி இருந்தது. அண்ணா வீட்டில் பத்திரிகையாளர் சந்திப்பு. ஆனந்த விகடன் இளம் நிருபராக நான் சென்றிருந்தேன்.

சிட்டிக்கு வணக்கம் கூறி என்னை அறிமுகப் படுத்திக் கொண்டு எங்கள் இல்லத் திருமணத்தை நினைவுபடுத்தினேன். "உங்கள் பேச்சு என்னை பத்திரிகையாளனாக ஆக்கியது" என்றேன்.

சிட்டி கவலையோடு என்னைப் பார்த்தார். "சம்பளம் என்ன? எதிர்காலத்தில் முன்னேற என்ன வாய்ப்பு? என்ன படித்தாய்" என்று அக்கறையுடனும் அன்புடனும் கேட்டார். அப்போது பெரிதாக சொல்லிக் கொள்ளும்படி சம்பளம் இல்லை. கூறினேன். சிட்டியைத் தன்னுடன் படித்தவர் என்று அண்ணா கூறினார்.

அண்ணா தன் அறிக்கைகளை சரிபார்க்க
சிட்டியை அனுப்புவது உண்டு. சிட்டி
அப்போது வார வெளியால் பணிபுரிந்தார்.

1971-ல் நூற்றாண்டு விழாவுக்காக
எழுத்தாளர்கள் குழு, சென்னையில் இருந்து
வத்தலக்குண்டுக்கு பஸ்ஸில் சென்றது.
சிட்டி அதில் இருந்தார். நானும் விகடன்
சார்பாக சென்றேன். பல எழுத்தாளர்களின்
சங்கமம் அது. நான் இளைஞன் என்பதால்
அன்புடன் நடத்தினர். சிட்டியின் அருகில்
அமர்ந்து 'நடந்தாய் வாழி காவேரி'
பற்றி பேசியவாறு வந்தேன். காவிரி
மீது அவருக்கு இருந்த பற்றினைக்
குறிக்கும் அழகு நூல் அது!

என்னை கதை எழுதுமாறு அவர் அந்த
பயணத்தில் பலமுறை தூண்டினர்.
நா. பார்த்தசாரதியும், கொத்தமங்கலம்
சுப்புவும் "உன்னால் முடியும்....நன்றாக
பேசுகிறாய்...நகைச் சுவையாகவும் கலகலப்பாக
பேசுகிறாய்" என்று கூறினார்கள். ஜமாய்
என்றார் சிட்டி. நான் என்ற
பெயரில் சிறுகதை எழுத இதுவே
காரணமாக அமைந்தது.

அந்தப் பயணத்தில் 'சிட்டி' பல செய்திகளைக்
கூறினார். மணிக்கொடி சகாப்தம் பற்றியும்
நிறைய செய்திகளைக் கூறினார் சிட்டி.
பலபேருடைய வெற்றியில் 'சிட்டி'யின்
பங்கு மறைமுகமாக இருந்திருக்கிறது!
இது உண்மை! முக்காலும் உண்மை!
முழுக்க முழுக்க உண்மை!



# நானும் பாக்கியசாலியே!

## கி. வீரராகவன்

மணிக்கொடி யுக எழுத்துலக சிற்பிகளில் எல்லோராலும் மதிக்கப்படுகின்ற திரு. பெ.கோ. சுந்தரராஜன் என்ற சிட்டி அவர்களின் நூற்றாண்டு விழா வைபவத்தில் 'சிட்டி' அவர்களின் புதல்வர்கள் என்னிடம் விரும்பிக் கேட்டது என்பதைவிட, அவர்களுக்கு நான் அளித்த வாக்குறுதியின்படி - 'சிட்டி' அவர்களின் அருமை, பெருமைகள், அவரது இலக்கிய பேரறிவு, உரையாடலின் சிறப்பு அம்சங்கள், வளரத்துடிக்கும் இளம் எழுத்தார்வமிக்க இளைஞர்களை ஊக்குவிக்கும் பாங்கு பற்றியெல்லாம் எழுத்துலக சிற்பிகளிடமிருந்து எழுதி வாங்குவதோடு மட்டுமல்லாமல், அவரது குடும்ப உறுப்பினர்களிடம் அவர் காட்டிய பரிவு, பாசம், ஊக்குவிப்பு பற்றிய செய்திகளையும் கொண்ட ஒரு அற்புதமான 'நூற்றாண்டு விழா' மலரை 'சிட்டி'யின் புதல்வர்கள் மகிழும் வண்ணம் நான் எடுத்த முயற்சியில், கணிசமான வெற்றியை நான் அடைந்து விட்டதாகவே கருதுகிறேன்! அந்த மலர் ஒரு 'கையெழுத்து' பத்திரிகையாகவே வெளிவரவேண்டும்

என்பதில் நான் உறுதியாக இருந்தேன்! ஆம். அந்த மலர் ஒரு கையெழுத்துப் பத்திரிகையாகத் தான் வரவேண்டும் என்ற எனது விருப்புக்கு காரணங்கள் பலவாயினும் குறிப்பிட்டுச் சொல்லும்படியான காரணங்கள் ஒன்றிரண்டை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இதில் எனது வாழ்க்கை குறிப்பு பற்றிய சில செய்திகளையும் உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

ஆம். பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் தான் பங்கு கொள்ளும் மேடைகளிலெல்லாம் 'எங்கள் நெல்லைச் சீமையிலே' என நெஞ்சுயர்த்தி குறிப்பிட்டு வந்த திருநெல்வேலி மாவட்டத்தின் தென் கோடியில், பொதிகைமலையின் அடிவாரத்தில், 'சித்ரா' நதிக்கரையில் அமைந்த தென்காசியில் அடியேன் பிறந்தேன். அது இந்திய விடுதலைப் போராட்ட காலம்! இந்திய விடுதலைக்காக ஆங்கிலேயரை எதிர்த்து முதல் முழக்கமிட்டு போராடிய வீரபாண்டிய கட்டபொம்மன், மற்றும் ஊமைத்துரை போன்ற சரித்திர நாயகர்களையும் தேசத் தந்தை மகாத்மா

காந்தி, இந்திய தேசிய ராணுவத்தை நிறுவிய
நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், மற்றும் பால
கங்காதர திலகர் போன்றவர்களை ஆதர்ச
புருஷர்களாக ஏற்றுக்கொண்டு விடுதலைப்
போராட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட
செக்கிழுத்த செம்மல் வ.உ. சிதம்பரனார்
கோகலே பாரதியார், வ.உ.சி அவர்களுக்கு
ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்புக் கூறிய
ஆஷ் துரையை ரயிலில் சுட்டுக்
கொன்று, அதே துப்பாக்கியால் தன்னையும்
சுட்டுக் கொண்டு உயிர்த்தியாகம் செய்த
மாவீரன் வாஞ்சிநாதன், பிரச்சார மேடைகளில்
ஆங்கிலேயருக்கு எதிராக வீரமுழக்கமிட்டு
விடுதலைப் போரில் மக்களை ஈடுபடுத்திய
பெருமைக்க சான்றோர்கள் கோமதி
சங்கர தீட்சிதர், டாக்டர் திருமதி
லட்சுமி சங்கரய்யர், யக்ஞேஸ்வர சர்மா
ஏ.பி.வி. சீபாமென்ஸோ, எல் சட்டநாதக்
கரையாளர், பத்திரிகைத் துறை மூலம்
விடுதலை வேட்கையை ஊக்கப்படுத்திய
திரு. டி. என். சொக்கலிங்கம், திரு.
ஏ.என். சிவராமன், இலக்கியத் துறையில்
சிறப்புமிக்கவர்களாக விளங்கிய பேராசிரியர்
அ. சீனிவாசராகவன், பி.ஸ்ரீ.ஸ்ரீ., டி.கே.சி.
தி.க.சி. திரு வல்லிக்கண்ணன், பொ. திருகூட

சுந்தரம் பிள்ளை, டீ.ப. சோமு, துறைவன்
ஏன்றைக் கற்றசாமி, திரு. மாயவா, திரு.
வையாபுரிப் பிள்ளை மற்றும் இத்துறையில்
கொடிகட்டிப் பறந்த திரு. எஸ்.ஜி. கிட்டப்பா,
எம். கே. தியாகராஜ பாகவதர், C.V.V.
பந்துலு, டி.கே.எஸ் சகோதரர்கள்,
என்.எஸ். கிருஷ்ணன், பூரணம்
விஸ்வநாதன், வி.ஏ. செல்லப்பா,
திரு. ~~...~~ வாசு, திரு. முள்ளி கண்ணாழ்,
நடிகர்கள் டி.எஸ். பாலையா மனோவாத்யார்
ஸ்ரீ கேசவநல்லூர் முத்தையா பாகவதர்,
திருமதி T.V. ரத்தினம், திருமதி. T.ஜி. பகவதி,
தொழில் முன்னோடியில் இந்தியா
சிமெண்ட்ஸ் திரு. எஸ்.வீ. சங்கரலிங்க
ஐயர், ராயல் என்பீல்டு திரு. K. சுந்தரம்
ஐயர், சி.என். எஞ்சினியரிங் திரு.
வெங்கடராம ஐயர், தினத்தந்தி பத்திரிகை
அதிபர் திரு. எஸ்.பா. ஆதித்தனார்,
டி.வி.எஸ் நிறுவனர் திரு. டி.வி.
சுந்தரம் ஐயங்கார், பிரபல தொழில்
அதிபர்களாக விளங்கிய பிரமச்சக்கரவர்த்தி
டி.ஏ. ஜொக்கலால் ராம்சேட், நாதஸ்வர
மேதை காருக்குறிச்சி அருணாசலம்
இன்னும் போற்றத்தக்க பெருமக்களைத் தன்னகத்தே

கொண்டு நான்முன்பே குறிப்பிட்டபடி சிறப்பு பெற்ற நெல்லைமாவட்டத்தின் ஒரு பகுதியாக விளங்கிய தென்காசியில் பிறந்த நான், எனது பால்ய பள்ளிப் பருவத்தின் ஒருபகுதியை அங்கே முடித்துக் கொண்டு, கல்யாணக்குறிச்சி என்று போற்றப்படும் கல்லிடைக்குறிச்சிக்கு தாய், தந்தையருடன் குடியேறினேன். தாமிரபரணி ஆற்றில் நீராடி மகிழ்ந்து, அருகில் உள்ள அம்பாசமுத்திரத்தில் பாராத்து பெற்று விளங்கிய 'தீர்த்தபதி உயர்நிலைப்பள்ளியில்' எட்டாம் வகுப்பு கல்வியை முடித்துக் கொண்டேன்.

சீறிப்பாய்ந்தோடும் காவேரி நதிக்கரையில் அமைந்த திருச்சி மாநகருக்குக் குடியேறும் ஒரு நிலை ஏற்பட்டது. அங்கே புகழ் பெற்று விளங்கிய 'தேசியக்கல்லூரி உயர்நிலைப்பள்ளியில்' அந்தக் காலத்து 'Tenth Standard' எனப்படும் எஸ்.எஸ்.எல்.சி உயர்கல்வியை முடித்துக் கொண்டேன்.

திருச்சி வாழ்க்கை என்னிடம் இயல்பாக குடிகொண்டிருந்த இலக்கிய ஆர்வத்தை தூண்டுவதாக அமைந்தது.

ஆம், திருச்சியைத் தலைமை இடமாகக் கொண்டு இயங்கி வந்த 'தென்னிந்திய ரயில்வே (எஸ்.ஐ.ஆர்) அலுவலகத்தில் எனது மூத்த சகோதரர் சுப்பிரமணியன் பணியாற்றி வந்தார். எனது பெற்றோர்களையும்,

மற்ற இரண்டு சகோதரர்களையும் (ஆம்:
நான், எனக்கு நேர் அடுத்த மூத்த சகோதரன்)
திருச்சிக்கு வரவழைத்துக் கொண்டான்.
அங்கு ஒரு வீடு பார்த்து நாங்கள்
அனைவரும் குடி புகுந்தோம். நாங்கள்
குடி அமர்ந்த வீடு திருச்சி கண்டோன்மெண்ட்
கோர்ட்டுக்கு அருகாமையிலுள்ள
பீமநகர் என்று அழைக்கப்பட்ட பகுதியாகும்.

பீமநகர் பகுதிக்கு ஒரு சிறப்பு உண்டு!
ஆம். அப்பொழுது 'ஆகாஷ்வாணி'
என்று அழைக்கப்பட்ட திருச்சி
வானொலியில் பணியாற்றிய சகல துறையைச்
~~சார்~~ சார்ந்தவர்களும் அங்கு தான்
வசித்து வந்தனர்.

வானொலி எழுத்தாளர்கள், நாடகாசிரியர்கள்,
செய்தி வாசிப்பாளர்கள், ஓரங்க
நாடகங்களில் பங்கு கொள்பவர்கள்
வானொலி ஒலிபரப்பும் அட்டவணைகளைக் கொண்ட
வானொலி பத்திரிகையைச் சேர்ந்தவர்கள்
என பலரும் அப்பகுதியில் தான் வசித்து
வந்தனர். ஆம். திரு. மீ.பா. சோமு,
திரு. துறைவன், திரு. சுகி. சுப்பிரமணியம்,
திரு. என். ராகவன், கவிஞர் ஏன்.ஏல். சிதம்பரம்,

வயலின் டி. குருராஜப்பா, கடம் ஆலங்குடி ராமச்சந்திரன், ஸ்ரீவைகுண்டம் பரமசிவம்பிள்ளை, திரு. கே.வி. தியாகராஜன், திரு. பாலகிருஷ்ணன், ரேடியோ அண்ணா என்று அழைக்கப்பட்ட திரு. விஸ்வநாதன் இன்னும் என்ன குறிப்பிடத்தக்க வானொலி பிரமுகர்களால் பரிமளிக்கப்பட்ட பகுதியாக மிளிர்ந்து விளங்கியது. என்னுடைய அதிர்ஷ்டம் 'சிட்டி' என்று அழைக்கப்பட்ட திரு. பெ.கோ. சுந்தரராஜன் (வானொலி ஆசிரியர்) அவர்கள் எங்கள் வீட்டிற்கு அடுத்த வீட்டில் வசித்து வந்தார்.

எனது சகோதரன் பணியாற்றிய ரயில்வே துறையைச் சேர்ந்த நண்பர்கள் பலர் அப்பகுதியைச் சேர்ந்த திருநெல்வேலி லாட்ஜிலும், மற்றும் கிருஷ்ணா விலாஸ் ஹோட்டல் அறைகளிலும் தங்கியிருந்தனர். அதில் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் இன்றைய பிரபல எழுத்தாளர் (அன்றைய ஆரம்ப எழுத்தாளர்) திரு. ஏ. எஸ். ராகவன், திரு. அனந்தபத்மநாபன், நாணு என்று அழைக்கப்பட்ட திரு. நாராயணசாமி, பிரபல நாடக ஆசிரியர் திரு. எஸ். டி. சுந்தரம் அங்கு அறையெடுத்து தங்கியிருந்தனர். திரு. ஏ.எஸ். ராகவன், திரு. அனந்தபத்மநாபன், திரு. நாணு ஆகிய மூவரும் எனது சகோதரனிடம் கலந்து

ஆலோசித்து 'ஸ்ரீ விநாயகா கலைக்கழகம்' என்ற கலைச்சார் அமைப்பை ஏற்படுத்திக் கொண்டார்கள். அதன் ஒரு பகுதியாக 'ஸ்ரீ விநாயகா' என்ற கையெழுத்துப் பத்திரிகையைத் துவக்கி, அதன் ஆசிரியராக திரு. ஏ.எஸ். ராகவனைப் பொறுப்பேற்கச் செய்தனர். திரு. நாணு அவர்கள் அதன் தலைவராக பொறுப்பேற்றார். நிர்வாகிகளாக எனது சகோதரர் அப்பிரமணியமும், திரு. அனந்தபத்மநாபனும் மற்றும் இவரும் பொறுப்பேற்றனர்.

ஆசிரியர் பொறுப்பேற்ற திரு. ஏ. எஸ். ராகவன் பத்திரிகையை திறம்பட நடத்தி வந்தார். பத்திரிகை நண்பர்கள் மத்தியிலும், பகுதியில் வசித்து வந்த அன்பர்களுக்கும் படிப்பதற்கு சுற்று முறையால் வழங்கப்பட்டது. அப்பகுதியில் வசித்து வந்த [illegible] எழுத்தாளர்கள் மத்தியில் பெரும் மதிப்பை ஏற்படுத்தியது. அவர்களில் ஒருசிலர் 'ஸ்ரீ விநாயகா' கையெழுத்துப் பத்திரிகைக்கு விஷயதானமும் செய்தார்கள். ஸ்ரீ விநாயகா கலைக்கழகத்தின் சார்பில் அவ்வப்பொழுது இலக்கிய கூட்டங்களும் நடைபெற்றன.

திரு. ஏ.எஸ். ராகவன் அவர்கள் (திருமணம் ஆகிவிட்டதால்) ஸ்ரீரங்கம் பகுதிக்குச் சென்று விட்டார். ஆசிரியர் பொறுப்பை திரு. அனந்தபத்மநாபன் ஏற்றுக் கொண்டார். ஒரு கட்டத்தில் அவரும் ஜெய்பூர் சென்று விட்டார். 'உங்கள் முயற்சி' என்று உற்சாகப் படுத்தி எனது தலைமையில் சுப்ரமணியம் என்னை ஆசிரியர் பொறுப்பை ஏற்கச் செய்தார்! (நான் அப்பொழுது பள்ளி மாணவன்).

நான் ஆசிரியர் பொறுப்பை ஏற்றதும் திரு. சிட்டி அவர்களின் உறுதுணைப்பு அதிகம் கிடைத்தது. இலக்கிய கூட்டங்கள் அடிக்கடி நடைபெற வழிவகை செய்தார். வானொலி அன்பர்களும், சுதந்திரப் போராட்டத் தியாகியும், பிரபல வக்கீலுமான திரு. என். ஹாலாஸ்யம் அவர்களையும், திரு. பாஸ்கரத் தொண்டைமான் போன்ற வித்தகர்களையும் நாங்கள் ஏற்படுத்திய சிறப்பு கூட்டங்களில் பங்கு பெற சிட்டி அவர்கள் வழி செய்தார். திரு. சிட்டி அவர்களின் வழிகாட்டுதலில், அவ்வப்பொழுது நடைபெறும் இலக்கிய கூட்ட செய்திகளை திரு. அ.வெ.ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களால்

துவங்கப்பட்டதும், திரு. வல்லிக்கண்ணனை ஆசிரியராகக் கொண்ட 'கிராம ஊழியன்' பத்திரிகையில் ஏற்பாடு செய்தார். திரு. சிட்டியால் இவ்விதழுக்கு பிரபல வித்வான்கள் மதுரை சோமு, கானகலாதர மதுரை மணிஐயர் போன்றோரும், திரு. கொத்தமங்கலம் சுப்பு, திரு. திரிலோக சீத்தாராம், கவிஞர். ந. பிச்சமூர்த்தி. திரு. எஸ். டி. எஸ். யோகி, திரு. பி. எஸ். ராமையா, திரு. கரிச்சான்குஞ்சு போன்ற இலக்கிய அன்பர்கள் பலரும் அழைப்பு பெற்று வருவர்.

எனக்கு அந்த வயதில் அதுபோன்ற மேதைகளையும், சான்றோர்களையும் தரிசிக்க பாக்கியம் கிடைத்ததே தவிர, அவர்களோடு உரையாடி பழகும் சந்தர்ப்பத்தை நான் பெறவில்லை. அவர்களை காண்பதையே பெருமையாக கருதினேன்.

பின்னும் திரு. பி. எஸ். ராமையா அவர்களை ஆசிரியராகக் கொண்டு மீண்டும் 'மணிக்கொடி' பத்திரிகை வெளியான போது திரு. சிட்டி அவர்கள் எனக்கும், எனது சகோதரர் சுப்பிரமணியம்

ஆக்கியோனின் இலக்கிய சர்வத்தைச் சுட்டிக்காட்டி 'மணிக்கொடி' திருச்சி வானொலியோகப் பொறுப்பை எங்களுக்கு கிடைக்கச் செய்தார். இந்தச் செய்தியை முன்கூட்டியே 'சிட்டி' அவர்கள் எங்களிடம் சொல்லவில்லை.

திரு. பி. எஸ். ராமையா எங்களுக்கு கடிதம் எழுதி 'சிட்டி' எங்களுக்குப் பணித்திருந்த பொறுப்பை எழுதிய பிறகுதான் தெரிய வந்தது! அது தான் 'சிட்டி' என்ற 'பரிசுட்டி'. நாங்களும் இயன்றவரை அந்தப் பொறுப்பை சிறப்புற செய்தோம்.

எனது இலக்கிய ஆர்வத்திற்கு பல வகையில் ஆதாரமாக இருந்த 'சிட்டி' அவர்கள், சென்னை வானொலி நிலையத்திற்கு மாற்றப்பட்ட பொழுது 'ஸ்ரீவிநாயகா கலைக்கழகத்தின் சார்பாக சிட்டி அவர்களுக்கு ஒரு பிரிவு உபசாரக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தக் கூட்டம் திருச்சி கண்டோன்மெண்ட் போலீஸ் ஸ்டேஷன் அருகில், சிட்டியின் ஆத்மார்த்த நண்பர் ஓரியண்டல் ஸ்ரீநிவாஸ ஐயர் இல்லத்தில் நடைபெற்றது ஆம். அந்த இல்லம் தான்

'மணிமண்டபம்' என்ற பெயரால் அழைக்கப்பட்டது. ஸ்ரீராம நவமியின் போது, அங்கேதான் ஸ்ரீதுரைமணிஐயர், துரைசாமி ஆகியோரின் இசைக் கச்சேரிகளும், ஸ்ரீஎம்பார் விஜயராகவாச் சாரியார் அவர்களின் உபன்யாச நிகழ்ச்சிகளும் தொடர்ந்து நடைபெற்று வந்தது. திருச்சி கண்டோன்மெண்ட் பகுதிக்கு பெருமை சேர்த்த ஒரு இல்லம் உண்டென்றால் அது அந்த 'மணிமண்டபம்' தான்.

'சிட்டியின் பாராட்டுக் கூட்டத்தில்' அவர் மீது அன்பு செலுத்திய அன்பர்களிடம் அவரது இலக்கியப் பணி, நண்பர்கள், மற்றும் உறவினர்களிடம் அவர் காட்டிய பரிவு, பாசம், [illegible] போன்ற இயல்புகளை அடிப்படையாகக் கொண்ட கட்டுரைகளைப் பெற்று 'சிட்டி' மணிமலர் என்று 'ஸ்ரீவிநாயகா' கையெழுத்துப் பத்திரிகையின் சார்பாக வெளியீடு செய்யப்பட்டது. அதில் 'சிட்டி எங்கள் வழிகாட்டி' என்று ஆசிரியர் என்ற முறையில் ஒரு தலையங்கம் எழுதினேன். அந்த தலையங்கம் பலராலும் பாராட்டப்பட்டது.

சிட்டி சென்னைக்கு மாற்றலாகி வந்த மறு வருடம் நானும் சென்னைக்கு வந்துவிட்டேன். பிரபல இன்சூரன்ஸ் கம்பெனியில் நான் வேலைக்குச் சேர்ந்து நானும் சென்னைவாசி ஆகிவிட்டேன்.

இலக்கியச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் தொடங்கிய தமிழரசுக் கழகத்தின் மயிலாப்பூர் பகுதியின் செயலாளராகப் பொறுப்பேற்று ஏதோ பொது வாழ்வு தொடங்கியது. 'சிட்டி' மணி மலரில் 'சிட்டி எங்கள் வழிகாட்டி' என்று நான் எழுதிய தலையங்கத்தின் அச்சுச் சுவட்டில் மயிலைத் தமிழரசுக் கழகத்தின் சார்பில் 'தமிழ் அன்பன்' என்ற ஒரு கையெழுத்துப் பத்திரிகையைத் தொடங்கி அதன் ஆசிரியர் பொறுப்பையும் வகித்தேன்.

பின்பொருநாளில் சிட்டி அவர்களை நான் சந்தித்தபோது, திருச்சியில் விநாயகா கையெழுத்துப் பத்திரிகையின் சார்பாக வெளியிடப்பட்ட 'சிட்டி மணிமலரை' என்னிடமிருந்து பெற்றுக் கொண்டார். தனது குடும்பத்தினரிடமும், சக எழுத்தாள நண்பர்களான சி.சு. செல்லப்பா, தி. ஜானகிராமன் போன்றோரிடம் காட்டி

பெருமிதம் கொண்டார். இந்தச் செய்தியை சிட்டியின் புதல்வர்களின் மூலம் கேட்டறிந்த நான் நெகிழ்ந்து போனேன். சிட்டியின் 'ஊக்குவிப்பு' மனப்பான்மைக்கு ஒரு எல்லையே கிடையாதா?

பத்திரிகைத் துறையில் 'மணிக்கொடி சகாப்தம்' என்பது ஒரு அரிய பொக்கிஷம்! விடுதலைப் போராட்ட காலத்தில் அந்தப் பத்திரிகையில் எழுதிய எழுத்தாளர்களை முன்னோடிகளாகக் கொண்டு உருவான அற்புதமான படைப்பாற்றல் கொண்ட எழுத்தாளர்கள் 'பாக்கியசாலிகளே! 'மணிக்கொடி' ஆரம்பத்துக்குத் திகழ்ந்த 'சிட்டி' போன்ற பெருமக்களோடு தொடர்பு கொள்ள நேர்ந்த நானும் பாக்கியசாலியே!

